
# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
(Peer Reviewed - Journal Multidisilinary)
ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

*Vol:7 Issue :25 January 2025*
கோட்டை:7 வாயில்:25 ஜனவரி 2025

அரண்
பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran
*International e Journal of Tamil Research*

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief
**Dr PRIYAKRISHNAN**

Publisher
**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**
Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India
selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**
School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**
Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**
Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**
Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

**DR JAGADEESAN.T.**
Assistant Professor of Tamil, Department of Indian Languages, Faculty of Arts, Banaras Hindu University,Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**
Teacher – in- charge/Assistant professor (SG),Department of Tamil, Institute of Languages, Literature& culture, Visva – Bharathi University,Santiniketan,West Bengal, India -731235

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr.Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr SILLLALEE A/L S.KANDASAMY**

Assistant Professor University Tunku Abdul Rahman (UTAR), Sungai Long,
Cheras, Selangor, Malaysia. sillalee@utar.edu.my

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr N.MUTHUMANI**

Principal, PPG College of Arts And Science,Coimbatore - 641035.

**Dr KANDASAMY**

Asst Professor Department of History, Rajus college
Rajapaalayam Madurai Tamil nadu herostone78@rrc.edu.in

**Dr S. KARUMPAAYIRAM**

Junior Research officer,Central Institute of Classical Tamil,Chennai-600100

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# Aran

*International e Journal of Tamil Research*


## EDITORIAL BOARD


**Dr S.KANNADASAN**

Assistant Professor,Tamil Department,The Madura College, Madurai.
Kannadasan@maduracollege.edu.in

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

**DR G.UMAMAHESWARI**

Asst professor and Head , Department of Tamil , P. K. R Arts college for women , Gobichettipalayam , Erode (Dt) , umag@pkrarts.org

**Dr CHANDRAKALA**

Asst Professor and Head, Department of Tamil , PPG college of Arts and Science, Coimbatore - 641035.

---

**நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்**

**இதழாக்கம்**

**திரு ப. ஜெயகிருஷ்ணன்**

**முதன்மை ஆசிரியர்**

**முனைவர் பிரியாகிருஷ்ணன்**

**+917299587879**

www.aranejournal.com

aranjournal@gmail.com


---

**அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.**

# அகத்தினுள்


**அகப்பொருள் மரபுகளின் பொருண்மைகள்**
**தெ.மதுபாலா**

**தற்காலப் பயன்பாட்டில் தன்மை வினைமுற்றுச் சொற்கள்**
**கோ. கோகிலா**

**தொல்காப்பியச் சொல்லதிகார உரையாசிரியர்கள் சிறந்த ஆசிரியர்கள்**
**முனைவர்.வி.சேகர்**

**ஐங்குறுநூற்றில் மருத நில வாழ்வியல் கோட்பாடு**
**கோ. கோகிலா**

**ஐங்குறுநூற்று மருதத்திணையில் "வேட்கைப் பத்து" வெளிப்படுத்தும் செய்திகள்**
**த.கல்பனா**

**சங்க இலக்கிய அகப்பாடல்களில் தோழியின் உளவியல் கூறுகள்**
**கு.கலையரசி**

**ஆற்றுப்படை இலக்கியத்தில் ஐந்திணைசார் உணவுகள்**
**மு.கௌசல்யா**

**சங்க இலக்கியங்களில் சமூக உறவுகள்**
**முனைவர் வெ. நளினி**

**பறம்பு மக்களின் பரந்த வாழ்வியல்**
**வீ. மஞ்சு**

**குறுநில மன்னா ்களின் பொருளாதாரநிலை**
**மு. சதீஸ்குமார்**

**கம்பராமாயணம் காட்டும் வாலிவதைப்படலம்**
**மு.கனகவள்ளி**

**காப்பியங்களில் மரபுக்கருவிகள்**
**வீ.விஜயலட்சுமி**


**அட்டைப்படம் உதவி**
**இணையம்**

**நன்றி**

# அகத்தினுள்


இஸ்லாமிய சூஃபித்துவமும் சடங்கு முறைகளும்
முனைவர் சா.இன்குலாப்

தேவிபாரதியின் "உயிர்தெழுதலின் சாபம்" சிறுகதையில் பெண்மன நிலைபாடு
S.Priyadharshini

விமணியின் குழந்தைச் செல்வம் படைப்பு - ஒரு பார்வை
முனைவர் கு.புஷ்பாவதி

அண்ணாவின் நாடகப் பனுவல்கள் மற்றும் நிகழ்த்துகைகளில் அவரது மறுமலர்ச்சி விடுதலை அரசியல் அரங்கு ஓர் ஆய்வு.
திரு.கு.ரவிச்சந்திரன்

பாரதிதாசனின் பெண்ணுலகம்
கா. கவிதா

பாரதியார் படைப்புகளில் பெண்ணியச் சிந்தனைகள்
நா.ரஹமத் நிஷா

“தோட்டியின் மகன்” நாவல் காட்டும் துப்புரவு தொழிலாளர்களின் வாழ்வியல் நிலை
மு. வசந்தி

நூற்றாண்டு கண்ட எழுத்தாளுமை இராஜம் கிருஷ்ணன்-பெண்ணின் குரலாய்
முனைவர் ப.விமலா அண்ணாதுரை

கே.ஆர்.மீராவின் புதினங்களில் வெளிப்படும் பெண்மொழி
நா.சௌந்தர்யா

Creating Virtual Platforms to Showcase Undergraduates' Artworks
1.Yasanthini, G.F



அட்டைப்படம் உதவி
இணையம்
நன்றி

# அகத்தினுள்


**இலக்கியங்களிலும் கல்வெட்டுகளிலும் அரசன்**
**முதுமுனைவர் பிரியாகிருஷ்ணன்**

**Lakśana and Lakśya in Music**
**Srivaramangai Sadagopan**

**சதாசிவ ப்ரம்மேந்திரரின் இசை உருப்படிகளில் பகவத்கீதையின் ஸாராம்ஸம்**
**ச. காயத்ரி தேவி**

**Importance of Sāhityam and the Influence of the Great composers in the musical compositions**
**Ms. Janaki Sadagopan**

**தெலுங்கும் தமிழும் தித்திக்கும் கலைவடிவம் பாகவதமேளா ஓர் ஆய்வுநோக்கு**
**கலாநிதி தாக்ஷாயினி பரமதேவன்**

**தமிழ்நாட்டின் மரபுவழி நிகழ்த்துகலையான தெருக்கூத்து**
**கலாநிதி. ஷார்மிலளா றஞ்சித்குமார்**

**திருமந்திரத்தில் காணப்படும் உடல்சார் கருத்துகள் நவீன அறிவியல் பார்வை**
**பேராசிரியர் முனைவர் சு.ஹரிபிரசாத்**



**அட்டைப்படம் உதவி**
**இணையம்**
**நன்றி**


தமிழ்

# சங்க இலக்கியங்களில் சமூக உறவுகள்

முனைவர் வெ. நளினி
உதவிப் பேராசிரியர்
எஸ் ஆர்.எம் அறிவியல் மற்றும்
தொழில் நுட்பியல் நிறுவனம்
அறிவியல் மற்றும் மானுடவியல் புலம்
ஆங்கிலம் மற்றும் அயல்மொழிகள் துறை
இராமபுரம்
சென்னை .89

**ஆய்வுச் சுருக்கம்**

இலக்கியம் என்பதே காலநிலை மற்றும் வாழ்வியல் முகிழ்ப்பாக ஆக்கம் கொள்ளும் தன்மைத்து ஆதலால் சங்க இலக்கியங்கள் இரண்டாயிரம் ஆண்டுகாலத் தொன்மையையும் மானுட வாழ்வியல் நிகழ்தகவுகளையும் உள்ளீடாகக் கொண்டு தோன்றியவை எனலாம். வெவ்வேறு புலவர்களால் இயற்றப்பட்டுப் பல்வேறு இடங்களில் சிதறிக்கிடந்த பாடல்கள் அகம், புறம் எனத் தேர்ந்த திணைக் கோட்பாட்டு அடிப்படையில் தொகுத்து நிரல்படுத்தித் தர நிர்ணயம் செய்யப்பட்டிருத்தலைக் காணமுடிகிறது. நிலவியல் மற்றும் சூழலியல் சார்ந்து பல்வேறு இனக்குழுக்களாகக் கலந்து வாழ்ந்த பழந்தமிழ்ச் சமூகத்தின் இயற்கை சார் இயங்கியல் தரவுகள் இவற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இத்தரவுகளின் வாயிலாக தனிமனிதச் சமூக உறவுகளையும் பொருளியல்சார் உற்பத்தி உறவுகளையும் இனம் காணமுடிகிறது. அகம் மற்றும் புற வாழ்வியல் இயங்குதளங்களில் பல்வேறு உறவு நிலைப் பின்னல்களைக் கொண்டிலங்கிய சமூகக் கட்டமைப்பையும் வாழ்வியல் நடவடிக்கைகளையும் வரையறை செய்ய முடிகிறது. எனவே சங்கச் செய்யுளாக்கங்களில் பதிவுசெய்யப்பட்டுள்ள மானுட உறவுகளையும் அதன் ஊடாக வெளிப்பட்ட சமூகக் கட்டமைப்பையும் அடையாளம் காணும் நோக்கில் இக்கட்டுரை அமைகிறது.

**திறவுச் சொற்கள்**

உறவு : சொற்பொருண்மை- தாய் வழிச் சமூகம்-சங்ககால உறவு முறைச் சொற்கள்- தற்கால உறவு முறைச் சொற்கள் - உறவுகளும் வாழ்வியலும்

**முன்னுரை**

மானுட வாழ்வுச் சூழலில் உறவுகள் என்பவை தவிர்க்க இயலாத் தன்மையுடையவை. உறவுகளே சமூகக் கட்டமைப்பின் அடிப்படை யாக அமைகிறது. விலங்குகளோடு விலங்குகளாகக் கலந்து வாழ்ந்த காலம் முதலே உறவுச் சேர்க்கையால் ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொண்டிருந்த நிலையினை அறிய முடிகிறது. வேட்டையாடல், விலங்குகளைத் தாக்கி அழித்தல், கிடைத்த வேட்டைப் பொருளைப் பகிர்ந்துண்ணல் எனத் தொடங்கிய வாழ்வியலில் கூட்டிணைவும் தொடர்பாடலும் உறவுகொள்ள வழியேற்படுத்தின. பின் வளர்நிலையில் வேட்டையாடலுக்கு மாற்றாக உணவை உற்பத்தி செய்தல் விளைந்தவற்றுக்கு உரிமைகோருதல் எனத் தொடர்ந்த வாழ்வியலிலும் இத்தகைய உறவு நிலைப் பின்னல்கள் தோற்றம் பெற்றுக் கிளைத்தன. குடி நிலை மற்றும் திணையமைப்பு சார்ந்தவாறு இவை

வகை தொகை செய்யப்பட்டுள்ளன. நிலவியல் மற்றும் சூழலியல் சார்ந்து பல்வேறு இனக்குழுக்களாகச் சங்க காலத்தில் கொல்லர், குயவர், தச்சர்,பருத்திப் பெண்டிர், நெசவாளர், பரதவர், உமணர், குறவர், எயினர், ஆயர், உழவர், பாணர், பொருநர், கூத்தர், வேடர்,, கோடியர், துடியர், கானவர், கடம்பர், பறையர், வணிகர்கள், வேளாளர்கள், வடுகர், புலையர் என் ஏராளமானோர் வாழ்ந்த வரலாற்றை அறிகிறோம். தொழில் அடிப்படையிலான இத்தகைய இனக்குழுவினர் குடும்பம் மற்றும் சமூக உறவுப் பின்னணியில் பல்வேறு கிளை உறவுத் தொடர்பினைக் கொண்டிருந்தனர்.. ஆயினும் சங்க காலச் சமூக உறவுகளாகக் காட்சிப்படுத்தப் பட்டுள்ளவை பொருளை மையமிட்டதாக அமையாமல் அன்பை முதன்மை நோக்கமாகக் கொண்டிலங்குவதைக் காணமுடிகிறது அன்பு எனப்படுவது தன்கிளை செறாஅமை (கலித்தொகை - 133 : 9) எனத் தெளிவான வரையறையைக் கலித்தொகை வழங்குவதன் வழி அக்காலச் சமூக உறவுகளின் அடிப்படை நோக்கை அறியமுடியும் . குறிப்பாகச் சங்க இலக்கியங்களில் மகடூஉ முன்னிலை உறவு முறைகளே பெருமளவில் பயில்வு பெற்றிருத்தலைக் காணமுடிகிறது. தொல்பழங்காலத் தமிழ்ச்சமூகம் பெண்ணையே முதன்மைத் தலைமையாகக் கொண்டு இயங்கியதற்கான சான்றுகளைக் காண்கிறோம். தாய் வழிச் சமூகமாக அறிஞர்கள் இதனை வரையறுத்து வழங்குகின்றனர். குறிப்பாக அவள் வரையறுக்கும் சட்டங்களுக்கும் முடிவுகளுக்கும் அச்சமூகம் கட்டுப்பட்டதையும் அறிய முடிகிறது. இனக்குழுச்சமூகமாக உருப்பெற்ற காலத்தில் பொருளாதாரப் பின்னணியிலான போர்களின் வாயிலாக அத்தலைமைப் பொறுப்பு ஆண்களிடம் வந்தடைந்தது. அடுத்து, நிலைத்தகுடிகளாக மாறிய நிலவுடைமைச் சமூகத்தில் பெண் தெய்வநிலைக்கு உயர்த்தப்பட்டாள். அதனாலேயே உறவு நிலைப் பின்னல்கள் பெண்மை நோக்கியே பெருமளவில் பயில்வு பெற்றன எனக் கருத இடமுண்டு. இவை அனைத்தையும் ஒரு சேரத் தொகுத்து ஆய்ந்தால் பண்டைய தமிழ்ச் சமூக இயங்கியலில் உறவுகள் பெற்றிருந்த சிறப்பிடத்தையும் முக்கியத்துவத்தையும் வரையறை செய்ய முடியும்.

**உறவு : பொருண்மை விளக்கம்**

உறவு என்பது இயற்கையால் தோற்றுவிக்கப்பட்ட ஒன்றாகும் இயற்கையின் உறவினில் தோன்றியவர்கள் மனிதர்கள். இந்த மனிதர்களின் முதல் உறவும் இயற்கையே ஆகும். ஆண் பெண் ஆகிய இருவருக்கும் இயற்கையின் ஊடாகவே ஒருவித ஈர்ப்புநிலை உண்டாகி உறவுப்பின்னல் தோற்றம் கொள்கிறது. இந்தப் பிணைப்புநிலை உறவுகள் வலுப்பெற அடிப்படையாக அமைகிறது. இன்றைய மனித குலத்தின் வாழ்வானது நாளைய மனித குலத்தின் தொடக்கப்புள்ளியாகும் இந்தத் தொடர்ச்சியானது செம்மையாக அமைய உறுதுணையாக இருப்பவை உறவுகள் ஆகும். விலங்குகளோடு விலங்குகளாகக் கலந்து வாழ்ந்த மனிதன் ஒரு வரையறைக்குள் வாழக் கற்றுக்கொண்டதும் சமூகப் படிநிலையாக்கங்களை வகுத்துக் கொண்டு வாழத் தொடங்கியதும் உறவுகளின் ஊடாக விளைந்ததேயாம். உறவு என்ற சொல்லுக்கு உறளுதல், உட்கொள்ளுதல், தொடர்பு கொள்ளுதல், ஒன்றோடு ஒன்றாகக் கலந்து விடல் எனப் பொருள் கொள்ளலாம், உறவு என்பதற்குச் சுற்றம், நட்பு, சேர்க்கை, சம்பந்தம், ஒற்றுமை, ஐக்கியம் என்றும் பலவிதமான பொருள்களைத் தமிழ் அகராதிகள் வழங்குகின்றன.. ‘உற' என்ற சொல்லானது ஆக்கமுற,,ஏக்கமுற. என வரும் பொழுது அது பெறுதல் என்ற பொருள்பட வருவதை அறிய முடிகின்றது. பெறுவது என்பது உறவாகும் ஒரு உயிர் இன்னொரு

உயிரோடு இணைந்து செயலாற்றும் போது நான் உன்னைப் பெற்றேன். நீ என்னைப் பெற்றாய் எனும் எண்ணப் போக்கில் அமைவதே இதன் அடிப்படை நோக்கம் எனலாம்.. ஒருவரிடம் இருந்து மற்றொருவர் ஒன்றைப் பெறுவதற்கு ஒரு தொடர்பு இருக்க வேண்டும் அத்தகைய தொடர்புதான் உறவு எனும் வலைப்பின்னல் ஆகும் .

தொல்காப்பியர் இயற்கையினால் உண்டான உறவுகளின் இனங்களை இரண்டு திணைகளைக் கொண்டு வேறுபடுத்திக் காட்டியுள்ளார். இதனை

**"உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே**
**அஃறிணை என்மனார் அவரல பிறவே (தொல்.பொருள் .1)**

எனும் நூற்பாவழி மக்களை உயர்திணை என்றும் ஏனையவற்றை அஃறிணை என்றும் பாகுபடுத்தி உள்ளார். மேலும் ஆணும் அல்லாமல் பெண்ணும் அல்லாமல் உருவத்தால் மாறுபட்டு காணப்படும் மக்கள் அன்று முதல் இன்று வரையில் வாழ்ந்து கொண்டுதான் உள்ளனர் இவர்களை தொல்காப்பியர் பேடு, பேடியர், பேடுகள், பேடுமர் என்ற சொற்களால் அழைக்கின்றார், இக்காலத்தில் இவர்கள் அலிகள் என்றும் திருநங்கைகள் அழைக்கப்பட்டு வருகின்றனர். மனித இனம் தோன்றி நாகரிகம் உருவாகி வாழத் தொடங்கிய காலகட்டத்தில் அவர்களுக்குள் சில கட்டுப்பாடுகளும் வரையறைகளும் உருவாகியிருக்க வேண்டும். இவை பெரும்பான்மையாக உறவுகளை மையமிட்டே தோன்றியிருக்க வேண்டும் என ஊகிக்கலாம்

**சங்க கால உறவுமுறைச் சொற்கள்**

உறவுமுறைகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு சொற்களும், சொற்களின் பொருளும் அவசியமானதாகும். ஏனென்றால் இந்தச் சொற்கள் தான் உறவுகளை வேறுபடுத்தி காட்டுவதற்கு கருவியாகத் தொழிற்படுகின்றன., ஆகையால் உறவுமுறைக்குரிய சொற்களைப் பற்றி அறிய வேண்டிய தேவை உண்டு. சங்க இலக்கியங்களின் வழி பழந்தமிழின வாழ்வியலையும் மக்கள் உறவுமுறை மேலிட்டுப் பயன்கொண்ட சொற்களையும் அறிய முடிகிறது. தாயை அன்னை, அன்னாய் , யாய், ஆகிய சொற்களாலும் தந்தையை எந்தை, நுந்தை எனும் சொற்களாலும் குறிப்பிட்டுள்ள பாங்கினைக் காண்கிறோம்.மேலும் சங்க கால வழக்கில் தலைவன், தலைவி, அத்தன், நம்பி, நங்கை, புதல்வன், புதல்வி , கிழவி, மகவு, மழலை, அத்தை, சிறுவன் சிறுமி, இளையோன், இளையோள், இளையோர், மூத்தோர், மூத்தோன் மூத்தோள், மருமகன், மருமகள், இல்லாள், இல்லத்தரசி, தமையன் போன்ற சொற்களும் பயன்கொள்ளப்பட்டுள்ளன.

**தற்கால உறவு முறைச் சொற்கள்**

தாய், தந்தை, கணவன், மனைவி, அம்மா, அப்பா, அத்தை, மாமா அத்தான், அண்ணன், தம்பி, , மருமகன் ,மருமகள், தாத்தா பாட்டி, அப்பச்சி, அம்மாச்சி, மாமா, மாமியார், மாமன் ,மைத்துனன், சித்தி சித்தப்பா, பெரியப்பா, பெரியம்மா, கொழுநன், நாத்தனார், மதினி , பெயரன், பெயர்த்தி , போன்றவை தற்காலத்தில் வழங்கப்படும் உறவுமுறைச் சொற்கள் ஆகும் .மேலும் சங்க காலத்தில் வழக்கிலிருந்து சொற்களான யாய் ஞாய், எந்தை, நுந்தை, நம்பி, நங்கை போன்ற சொற்கள் இக்காலத்தில் வழக்கில் காணப்படவில்லை.

**உறவுகளும் வாழ்வியலும்**

தமிழர்கள்தம் வாழ்வினைத் திணைக் கோட்பாட்டு அடிப்படையில் அகம், புறம் எனத் தேர்ந்த நிலையில் பகுத்து வழங்கியுள்ளனர். திணைக் கோட்பாட்டு வாழ்வியலில் தொடர்பாடலுக்கும் சமுதாய இயங்கியலுக்கும் உரிய உறவுமுறைகளாகக் காதல் (களவு) , திருமண உறவு (கற்பு) ,பாச உறவு, தகாத உறவு, நொது மலர் உறவு என ஐந்து வகைகளாகப் பிரித்துப் பயன்கொண்ட பாங்கினை அறிய முடிகிறது.. குறிப்பாகத் தனிமனிதனின் உரிமைகளும் கடமைகளும் சமூக இணைவும் பழக்கவழக்கங்களும், விருப்பு வெறுப்பு மேலிட்டு பண்பாட்டு இயல்புகளும் இத்தகைய உறவுகளாலேயே கட்டுண்டு கிடக்கின்றன..

**காதல் உறவுகள்**

உயிர்கள் அனைத்திற்கும் காதல் உணர்வு பொதுவானது என்னும் கருத்தியலைத் தொல்காப்பியர் எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது தானமர்ந்து வரூஉம் மேவற்றாகும் (தொல்.பொருள். 29). என்கிறார். காதலால் ஏற்படுகின்ற உறவுதான் மற்ற உறவுகள் அனைத்திற்கும் தலையாய காரணியாக உள்ளது. களவில் ஏற்படுகின்ற உறவுக்கு காதல் உறவு என்று பெயர்.. தலைவியைக் கிழத்தி என்றும் தலைவனைக் கிழவன் என்றும் கூறுவர். ஒத்த காமம் உடையவர்கள் எதிர்ப்படும் போது எதிர்பாராத உணர்வினால் கட்டுண்டு காதல் வசப்படுவதாக அமைவது களவில் உருவாகும் உறவு முறையாகும், தலைவன் தலைவி ஆகிய இருவருக்கும் கற்பு வாழ்விற்கும் கணவன் மனைவி என்ற உன்னத உறவுக்கும் இதுவே அடித்தளமாக அமைகின்றது .பழந்தமிழ் இலக்கியத்தில் கணவன்- மனைவி உறவு வேறு எம்மொழி இலக்கியங்களிலும் கூறப்படாத அளவு பிரிவில்லா ஒருமைப்பாட்டுடன் விளங்குவதாகக் கூறப்படுகிறது.

**"இம்மை மாறி மறுமை யாயினும்**
**நீயாகியர் என்கணவனை**
**யானாகியர் நின்நெஞ்சு நேர்பவளே (குறுந். 49)**

என்று தலைவி "எல்லாப் பிறப்புகளிலும் நாமே கணவனும் மனைவியும் ஆவோம்' என உரைக்கக் காண்கிறோம்'

இதேபோல களவில் தலைமக்கள் கொண்ட உறவின் உயர்நிலையினைப் பின்வரும் குறுந்தொகைப் பாடல் மூலம் அறிய முடிகிறது.

**"பூ இடைப்படினும் யாண்டு கழிந்தன்ன**
**நீர் உறை மகன்றில் புணர்ச்சி போலப்**
**பிரிவு அரிது ஆகிய தண்டாக் காமமோடு**
**உடன் உயிர் போகு தில்ல - கடன் அறிந்து**
**இருவேம் ஆகிய உலகத்து**
**ஒருவேம் ஆகிய புன்மைநாம் உயிர்க்கே "(குறுந்தொகை. 57.)**

நீரில் உறைகின்ற மகன்றிப் பறவை தனது இணையுடன் நீந்தும்போது பூவானது இடையில் தோன்றினாலும் ஒரு வருடமே கழிந்தது போல துன்பப்படும் ,அதுபோல நானும் என் தலைவனும் பிரிந்து வாழ்வதே மிகவும் துன்பத்தை தருவதாக உள்ளது என்று தலைவி கூறுவதிலிருந்து தலைமக்கள் ஒருவர் மீது ஒருவர் வைத்திருந்த காதல் உறவின் ஆழத்தை அறிய முடிகிறது. தமிழர்தம் வாழ்வியல்

வழிகாட்டியாக விளங்கும் திருக்குறள் காதற்சிறப்புரைத்தல் எனத் தனி அதிகாரம் வகுத்திருப்பதோடு காதல் உறவின் பல்வகைக் கோணங்களையும் படம்பிடித்துக் காட்டியுள்ளது. சான்றாக

**"நெஞ்சத்து காத லவராக வெய்துண்டல்**

**அஞ்சுதும் வேபாக் கறிந்து." (திருக்குறள், . 1128.)**

உணவைச் சூடாக உண்டால் உள்ளத்தில் உறைந்திருக்கும் காதலருக்குச் சுட்டுவிடும் என்று அஞ்சி அத்தகைய. உணவைத் தவிர்ப்பதாகத் தலைவி கருதியிருப்பது தலைமக்களின் காதல் உறவு ஆழத்தை உணர முடிகிறது.

**திருமண உறவு**

களவுக் காலத்தில் கூடிய தலைமக்களின் உறவு நிலை பெறுவதும் உரிமை பெறுவதும் திருமணத்தின்போது தான் , காதல் வாழ்வில் ஏமாறுதலும் ஏமாற்றுதலும் பொய்யுரைப்பதும் தோன்றிய பொழுது திருமணம் எனும் சடங்கு முறைகள் தோன்றின. இதனை

**"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்**

**ஐயர் யாத்தனர் கரணம் என்ப" (தொல். பொருள். 143)**

எனும் தொல்காப்பியர் கூற்று மூலம் உணர முடிகிறது .

திருமணத்தினைக் கரணம், வரைவு, மன்றல், வதுவை, போன்ற பல சொற்களால் அழைத்தனர். திருமணம் என்பது சுற்றத்தாரால் ஏற்படுத்தப்படும் ஓர் உறவாகும். செம்மையான நிலையில் சிறப்புடன் வாழ்ந்த தமிழர்களின் வாழ்வினை சுட்டும் தொல்காப்பியம் மறையோர் தேயத்து மன்றல் எட்டு என்று கூறுவதிலிருந்து எட்டு வகையான திருமண முறைகள் பின்பற்றப்பட்டதை அறியமுடிகிறது. திருமண உறவு என்பது இல்லறத்தின் நுழைவு வாயிலாகும். திருமணத்திற்குப் பிறகு ஒரு ஆணும் பெண்ணும் கணவன் மனைவியாக இணைந்து குடும்பம் நடத்துவதென்பது சமுதாயக் கடமைகளையும் ஆற்றுவதற்கான வாய்ப்புக் களமாக அமைகின்றது. மேலும் அறநெறி தவறாமல் தானும் நடந்து பிறரையும் நடக்கச் செய்து வாழும் திருமண உறவான இல்வாழ்க்கையானது தவம் செய்பவர்களின் நோன்பை விட மிகவும் வலிமையானது இதனை,

**"ஆற்றின் ஒழுக்கின் அறனிழுக்கா இல்வாழ்க்கை**

**நோற்பாரின் நோன்பை உடைத்து ( திருக்குறள். 48)**

என்ற வள்ளுவர் வாக்கின்படி அறிய முடிகிறது.

**பாச உறவுகள்**

எல்லா உயிர்களையும் இணைத்துக் கட்டி இயங்கவைப்பது அன்பு ஒன்றுதான். இந்தப் பாசமானது எல்லோரிடமும் நிலையாக இருப்பதில்லை . குருதிவழி உறவுகளைப் பாச உறவுகள் என்று அழைப்பர். பெற்றோர்கள் பிள்ளைகளைத் தாலாட்டிச் சீராட்டி அன்பு பாராட்டி நல்லதொரு வழியையும் காட்டிப் பாடம் புகட்டி வளர்த்து வருகின்றனர், வேண்டுவன வேண்டும்போது கொடுக்கின்றனர். இங்கு காட்டப்படுகின்ற அன்பு என்பது பாசத்தால் உருவானது ஆகும். அண்ணன்,தம்பி, தங்கை, தமக்கை, சித்தப்பா, பெரியப்பா, தாத்தா போன்றவர்கள் காட்டுகின்ற அன்பு பாச உறவால் உண்டானது ஆகும். .தலைவன் மீது கொண்ட பாசத்தின் காரணமாக தலைவி அவனை ஒரு நாள் கூட பிரியாது இருக்க வேண்டும் என்று நினைக்கின்றாள். எனினும் இயற்கையாகவே

தலைவிக்கு மூன்று நாள் பிரிவு உண்டு, இந்நாட்களில் தலைவி வீட்டில் தனி இடத்தில் வைக்கப்படுகிறாள். அந்த நாட்களில் தலைவனை பிரிந்து அவள் படும் கொடுமையைப் பின்வரும் பாடல் மூலம் அறிய முடிகிறது .

**" குக்கூ என்றது கோழி அதன் எதிர்**
**துட்கென்து என் தூய நெஞ்சம்**
**தோள்தோய் காதலர் பிரிக்கும்**
**வாள் போல் வைகறை வந்தன்றால் எனவே ( குறுந்தொகை, .44.)**

இயற்கையாக உண்டான பிரிவிலும் கூட தன் கணவனோடு வாழ்வதாக எண்ணிக் கனவு கண்டுகொண்டிருக்கும் தலைவியின் கனவை கலைப்பதற்குக் இப்பொழுது விடிவதற்குள் கோழியானது கூவுகின்றதோ என்று தலைவி கூறுவதில் இருந்து பாச உறவின் மேன்மையை உணர முடிகிறது.

**தகாத உறவுகள்**

தகாத உறவுகள் என்பவை நீதிக்கு புறம்பானவை மறுக்கப்பட வேண்டியவை ஆகும். இக்காலத்தில் உள்ள விலைமாதர் உறவும் சங்க காலத்தில் இருந்த பரத்தையர் உறவும் தகாத உறவுகள் ஆகும். சங்க இலக்கிய மருதத்திணைப் பாடல்களில் பரத்தையர்கள் பற்றிய மிகுதியான செய்திகள் காணப்படுகின்றன. மருதநிலத்தின் உணவு உற்பத்தி மற்றும் விளைச்சல் மேலிட்ட பொருளாதார நிலையில் மேம்பட்ட வாழ்க்கைமுறை பரத்தையர் தேடலுக்கு வழிவகுத்திருக்கிறது. மருதநிலத்தில் வாழும் மக்களுக்கு செல்வச் செருக்கு மிகுதியாக உண்டு இதனால் இவர்கள் அதிகமாக பரத்தையர்களை நாடிச் சென்றனர்.

தலைவன் தலைவியிடம் காட்டிய அன்பையும் நேசத்தையும் பரத்தையரிடமும் காட்டி இருக்கின்றான் .பரத்தையருக்கும் தலைவிக்கும் தலைவன் மீது கொண்ட அன்பின் காரணமாக உரிமைப் போரும் ஊடலும் எழுந்திருக்கிறது, பரத்தையர் கேட்கும்படி தோழியிடம் தலைவி ஏசுகின்றாள். பரத்தையும் தோழியர் கேட்கவும் தலைவி கேட்கவும் ஏசுகிறாள்.தானாக விளைந்து விழுகின்ற பழத்தை நீர் நிலையில் உள்ள மீனானது பற்றி உண்ணும் அதேபோல்தான் தலைவன் எம் இல்லத்திற்கு தானாக வந்தான் அன்றி நாங்கள் அவனை வர வைக்கவில்லை என்றும், தலைவன் தன்னோடு இருக்கும்போது சுதந்திரமாக இருந்ததாகவும் தலைவியோடு இருக்கும்போது சொல்வதைச் சொல்லும் கண்ணாடி நிழல் போல அடிமையாக இருப்பதாகவும் குறை கூறுகிறாள்.(குறுந்தொகை.8)

**நொதுமலர் உறவுகள்**

நொது மலர் உறவு என்பது இரத்த வழி உறவும் அல்ல, காதலால் ஏற்பட்ட உறவும் அல்ல, பணியின் காரணமாக செல்லுகின்றபோது அப்பணியில் தன்னோடு இருப்பவரோடும் பயணத்தின் போது பயணத்தில் தன்னோடு பயணிப்பவர்களோடும் வணிகத்தின் போது ஏற்படுகின்ற தொடர்பினால் பிறரோடு ஏற்படும் நட்பு இவை யாவும் நொதுமலர் உறவுகள் ஆகும். சங்க இலக்கியங்களில் தலைமக்களின் அகவாழ்வில் உறவல்லாத உறவாக உள்ளவர்களை அகப்பாடல்கள் வழி அறிய முடிகின்றது, சான்றாக வழிப்போக்கர், பாணன், பாடினி, விறலி, தேர்ப்பாகன், போர்வீரர்கள் இன்னும் சமுதாயத்தில் பற்பல தொழில்புரிபவர்கள் சான்றோர்கள், முனிவர்கள், விருந்தினர்கள் இவர்களை எல்லாம் நொதுமலர் உறவினர்களாகக் கருதலாம். தலைவி தலைவனோடு உடன் போக்கு சென்று

விடுகின்றாள் அவர்களைத் தேடித் திரிகின்ற செவிலிக்கு தலைமகளோடு உறவு உண்டு. ஆனால் இடைச்சுரத்துக் கண்டோருக்கு என்ன உறவு இருக்கிறது எனினும் செவிலி புலம்புகின்ற புலம்பலைக் கேட்ட விடத்து கருணையின் காரணமாகத் தலைமக்களைப் பற்றிக் கூறுகின்றனர், இது சிறு உதவியாக இருந்தாலும் அப்போதைய நிலைக்கு இது பெரும் உதவியாக இருந்தது இவ்வாறாகத் துன்பம் நீக்கியவரின் நட்பானது ஏழு பிறவியிலும் தொடர்ந்து வரும் என்ற வள்ளுவர் கூற்று இதற்குச் சான்றாக அமைகிறது.

**“எளிமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கன்**

**விழுமம் துடைத்தவர் நட்பு “ (திருக்குறள்.107.)**

மேலும் தலைவனும் தலைவியும் உடன் போக்கில் செல்கின்றனர் அப்போது அங்கு வந்த இடைச்சுரத்து மக்கள் பொழுதும் செலவும் பகையும் காட்டிச்செலவு அழுங்குவித்தனர். யார் பெற்ற பிள்ளைகளோ இப்படி மாலைப்பொழுதில் கொடிய பாதையில் நடந்து போகின்றனர் என்று கூறி தலைமக்களிடம் போகின்ற பாதையின் தன்மையினை எடுத்துரைக்கின்றனர். இதனைப் பின்வரும் பாலைத்திணை பாடல் மூலம் அறிய முடிகிறது

**“எல்லினும் எல்லின்று பாடும் கேளாய்**

**செல்லா தீயோ சிறுபிடி துணையே (குறுந்தொகை.350)**

யாரோ எவரோ எக்கேடு கெட்டுப் போனால் நமக்கு என்ன என்று இல்லாமல் கருணையினால் அவர்களைத் தடுத்து எச்சரிக்கின்றனர். இதன் வழி நொதுமலர் உறவின் பண்பு எப்படிப்பட்டது என்பதை உணர முடிகின்றது, வழிகாட்டியாக இருக்கும் இந்த உறவானது வாழ்க்கை முழுவதும் தொடர்ந்து வருவது இல்லாவிட்டாலும் நெஞ்சம் நிறைந்த நன்றியுணர்வுக்குரிய உறவாக அமைகின்றது.

**முடிவுரை**

தொகுப்பாகத் தமிழ் நிலத்து ஆதிக்குடிகளின் வேட்டைச்சமூக வாழ்வியல் அதன் தொடர்ச்சியாக ஆக்கம் கொண்ட மேய்ச்சல் சமூகம், உணவை உற்பத்தி செய்த வேளாண் சமூகம் , தாய்வழி மற்றும் தந்தைவழிச் சமூகங்கள் என் அனைத்திலுமே கூட்டிணைவும் உறவு நிலைப் பின்னல்களும் தொழிற் பட்டிருந்ததை அறிகிறோம். சங்க கால வாழ்க்கை முறை இயற்கையமைப்பை அடிப்படையாகக் கொண்டது ஆதலால் . மக்களின் உணவு, தொழில், பழக்கவழக்கங்கள், பொழுது போக்குகள், சிந்தனைப் போக்குகள் சமயநம்பிக்கைகள் விழாக்கள் என அனைத்து பண்பாட்டு நடவடிக்கைகளிலும் உறவு சார் நடவடிக்கைகள் எதிரொலித்தன. சங்க இலக்கியங்களில் அறம்பற்றிய பதிவுகளைக் கவனிக்கும்போது, ஒரு காலகட்டத்தில் களவு வாழ்க்கையே சமூக அறமாக இருந்தது என்பதும், அப்போது தாய்வழிச் சமூகமாகத் தமிழ்ச் சமூகம் இருந்தது என்பதும், அது தந்தை வழிச் சமூகத்தில் தடை செய்யப்பட்டு, அறமற்றதாக ஆக்கப்பட்டு, பெற்றோர் ஒப்புதலுடன் கூடிய மணம் அல்லது கற்புமணம் அறமுடையது என்றும் வலியுறுத்தப்பட்டது. சங்க இலக்கியத்தை அணுகும் மானிடவியல் பார்வைகொண்டோர், வேட்டையாடும் இனக்குழு வாழ்க்கையும் ஆடுமாடு மேய்க்கும் இனக்குழு வாழ்க்கையும் அழிந்தநிலையில் தனிச்சொத்துடை மையும் அரசுகளும் தோன்றிய வரலாற்றுக்காலம் என்று சங்ககாலத்தை வரையறுக்கும் நிலையுடன் பொருத்திப் போகும் வகையிலேயே சங்ககால மானுட உறவுகளும் சமுதாய அமைப்பும் தொழிற் பட்டிருந்தன என விளங்கிக் கொள்ளலாம்.

**பயன் பயந்த நூல்கள்**


1. சற்குணவதி. அ.தமிழ் இலக்கியங்களில் மனித உறவுகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் , சென்னை 113. 2010
2. தட்சிணாமூர்த்தி.அ. சங்க இலக்கியம் உணர்த்தும் மனித உறவுகள் , நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை -18. 2016

3. பரமசிவன் தொ.ப. தமிழர் உறவு முறைகளும் சமயமும் வழிபாடும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை -18.,2023

4.பிருந்தா.ஸ்ரீ. சங்க இலக்கியத்தில் தாய், வலம்புரிப் பதிப்பகம், திருச்சிராப்பள்ளி ,முதல் பதிப்பு .2006 .

5.மாதையன்.பெ; சங்ககால இனக்குழுச் சமுதாயமும் அரசு உருவாக்கமும்; பாவை பப்ளிக்கேஷன்ஸ், 2004

ARAN International e-Journal of Tamil Research

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2025, ஏப்ரல் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள்- ஏப்ரல் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஏப்ரல் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com